தொகுதி 7] [பகுதி 12

# பாலர் கல்வி

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின்
மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை)

சித்ரபானு ௵ பங்குனி ௴
MARCH 1943

பிரசுர கர்த்தர்கள் :

தென் இந்திய ஆசிரியர் சங்கம்

520, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 2—0—0
வெளி நாடு
F.M.S.S.S. ஷில்லிங் 4

தனிப் பிரதியின் விலை :
உள் நாடு ரூ. 0—4—0
வெளி நாடு ரூ. 0—6—0

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | கல்வியும் கிராமச் சுகாதாரமும் .... .... | 265 |
| 2. | 'கதை சொல்லுதல்'—ஒரு போதனை முறை .... —S. ராமஸ்வாமி அய்யங்கார் | 268 |
| 3. | சங்கீதம் .... .... .... .... —K. R. ராமலிங்கம் | 270 |
| 4. | 33-வது சென்னை மாகாணக் கல்வி மகாநாடு—1943 .... | 273 |
| 5. | செய்தித் திரட்டு .... .... .... | 276 |
| 6. | பத்திராதிபர் குறிப்புகள் .... .... .... | 281 |


## சந்தாதார்களுக்கு அறிக்கை

சந்தாதார்களுக்கு ஞாபகப் படுத்தும் பொருட்டு பாலர் கல்வியின் சந்தா எந்த மாதத்துடன் முடிவடைகிறதோ அந்த மாதப் பத்திரிகையில் அச்சந்தா நம்பர்களைப் பிரசுரிக்கிறோம். சந்தாதார்கள் அதை முக்கியமாகக் கவனித்து சந்தா தொகையைத் தவக்கமில்லாமல் முன்பணமாக அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். தற்சமயம் அசௌகரியமாயிருந்தால் சந்தா அனுப்பும் தேதியைக் குறித்து உடனே ஒரு கார்டு எழுதியனுப்பவும். தவறினால் வி. பி. அனுப்பி சந்தாவை வசூலிக்க நேரிடும்.

தவிர ஒவ்வொரு மாதமும் சஞ்சிகை 25உக்குள் கிடைக்காவிட்டால் உடனே தெரிவிக்கவேண்டும். அதற்குப் பிறகு வரும் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

1943 மார்ச் மாதத்துடன் முடிவடையும் சந்தா நம்பர்கள் :—

சென்னை — M. 2, 5, 20, 23, 24, 36, 38 47.
செங்கல்பட்டு — Ch. 1, 4, 18, 37, 39.
வடஆற்காடு — N.A. 3, 4, 5, 8, 9, 10, 12, 13, 23, 25, 40, 48, 50.
தென்னாற்காடு — S.A. 5 9, 11, 12, 14, 24, 31, 77, 85, 87, 88, 89, 91.
தஞ்சாவூர் — Tan. 1, 3-A, 6, 11, 12, 14, 15, 16, 17, 20, 22, 23, 29, 44, 45, 49, 49-A, 50, 60, 68, 69, 70, 71, 72, 82, 84, 88, 90, 97, 98.
திருச்சி — Tri. 3, 9, 9-A, 12, 15, 22-A, 28, 47, 48, 53, 54, 55.
ராமனாதபுரம் — Rd. 1, 4, 5, 9, 12, 13, 23, 29, 53, 63.
மதுரை — Md. 3, 4, 5, 6, 9, 19, 26, 48.
திருநெல்வேலி — Tin. 2, 3, 4, 5, 5-A 6, 8, 13, 13-A, 17, 19, 22, 23, 25, 33-A, 39, 40, 43, 46, 47, 48, 63, 67, 68, 70, 88, 89, 90, 92.
சேலம் — S. 1, 2, 3, 6, 8, 10, 19, 23, 31, 33, 35, 61, 65.
கோயமுத்தூர் — Co. 3, 4, 6, 7, 14, 17, 18, 23, 35, 36, 39, 40, 41, 52, 59.
திருவாங்கூர் — Tra. 1.

குறிப்பு.—சந்தா நம்பர்கள் விலாசத்துடன் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆபிஸுக்கு அனுப்பும் ஒவ்வொரு கடிதத்திலும் மணியார்டர் கூபன்களிலும் சந்தா நம்பரைக் கட்டாயம் குறிப்பிடவும். —பத்திராதிபர்

# பாலர் கல்வி

தொகுதி 7 | 1943 ஸு மார்ச் மீ<br>சித்ரபாநு ஸு பங்குனி மீ | பகுதி 12


## கல்வியும் கிராமச் சுகாதாரமும்

சுகாதாரத்தைப் பிள்ளைகளுக்கு வெறும் பாடமாகப் போதிப்பதில் பிரயோஜனமில்லை. சுகாதார முறைகளை அவர்களுக்கு விளக்கிச் சொல்லி, அவற்றைச் செய்து வரவும் தூண்ட வேண்டும். உடம்பைச் சுத்தமாக வைத்து வரும்படியாகப் போதிக்கவும் வேண்டும்; அதன்படி செய்து வருகிறார்களா வென்று கவனித்து வரவும் வேண்டும். தினசரி பல் தேய்த்துக் குளித்துத் தலைசீவி வருகிற விவரங்களை அவர்கள் பள்ளிக்கூடத்திற்கு வந்ததும் ஒரு அட்டையில் குறித்து வரும்படி செய்ய வேண்டும்; அப்படிக் குறித்து வரும்பொழுது, அவர்கள் செய்யத் தவறியதற்காக வெட்கப்படவுங் கூடும்; ஆசிரியர்களும் அதைப்பார்த்து அவர்களை உடனுக்குடனேயே திருத்தி வரவும் செய்யலாம்.

பிள்ளைகளுக்குச் சவர்க்காரம் செய்யச் சொல்லிக் கொடுத்தால், தாங்களாகவே வீட்டில் சவர்க்காரம் செய்யப் பழகிக் கொள்ளுவார்கள். வேட்டி துணிகளுக்கும், உடம்புக்கும் போட்டு அவற்றைச் சுத்தமாகவும் வைத்து வருவார்கள்.

சிரங்குக்கையோடு பிள்ளைகள் பள்ளிக்கூடம் வந்தால், சவர்க்காரம் போட்டுக் கையைக் கழுவச் சொல்லித் தேங்கா யெண்ணையையும் கந்தகத்தையும் குழப்பிச் சிரங்குக்குப் போடச் சொல்ல வேண்டும். வேறு மருந்தைச் சேர்க்கச் சொல்லவேண்டும். இப்படியாகப் பழகின பிள்ளைகள் பின் வாழ்க்கையிலும் தாங்களாகவே மருந்து செய்து போட்டுக் கொள்ளுவார்கள். உடம்பைச் சுத்தமாக வைத்து வந்தால் சிரங்குகள் வராவென்றும், அப்படிச் சுத்தமாக வைத்து வருகிற பிள்ளைகளுக்குச் சிரங்குகள் வராததையும் காட்டிச் சுத்தத்தின் அவசியத்தையும் வற்புறுத்த வேண்டும்.

பிள்ளைகளுக்கு, குடி தண்ணீர்க் கிணற்றைச் சுத்தமாக வைத்து வர வேண்டிய விவரத்தைப் பாடமாகச் சொல்லி வைத்தால் போதாது. பிள்ளைகளைக் கிணற்றுக்குக் கூட்டிக் கொண்டு போய் வெளியே தெறிக்கிற தண்ணீர் கிணற்றுக்குள் விழாதிருக்கிறதா வென்று பார்க்கச் சொல்ல வேண்டும். கிணற்றுக்குள்ளும் மேல் பத்தடி உயரத்திற்குச் சுற்றிவர சுவர் கட்டப்பட்டிருக்கிறதா வென்பதையும் கவனிக்கச் சொல்ல வேண்டும்; கிணற்றுக்கு மேலேயும் சுற்றிலும் கை பிடிச் சுவர் வேண்டிய அவசியத்தை யுணர்த்த வேண்டும்; அப்படியில்லா திருந்தால், வெளியே சிதறுகிற தண்ணீர் அசுத்தத்துடன் கிணற்றுக்குள் இறங்கிக் கிணற்றுத் தண்ணீரை அசுத்தப்படுத்து மென்றும், அப்படி அசுத்தமான தண்ணீரைக் குடிப்பதால் சிரங்கு முதலிய நோய்களும் காணுமென்றும் விளக்கிச் சொல்ல வேண்டும். பக்கத்திலுள்ள மரத்திலைகள் கிணற்றுக்குள் விழக்கூடா தென்றும், சூரியனுடைய வெளிச்சம் கிணற்றுக்குள் நன்ருக விழவேண்டுமென்றும் விளக்கமாகப் போதிக்க வேண்டும். கிணற்றின் அடிவரை கடகாலைவிட்டு அளறிருக்கிறதா வென்று பார்க்கச் சொல்லி, அப்படி அளறு இருந்தால் தண்ணீர் கெட்டுப் போகுமென்பதை உணர்த்த வேண்டும். இப்படியாகக் கற்பிக்கப்படும் கல்வி பின் வாழ்க்கையிலும் திட்டமாகப் பயன்படும்.

பிள்ளைகளுக்குத் தண்ணீரைச் சுத்தம் பண்ணும் விவரமும் சொல்லி வைக்க வேண்டும்; அவர்களைக் கொண்டே, சிறு கிணருனல் ஒரு வாளித் தண்ணீரில் ஒன்றை அவுணம் சாம்பரப் பரமங்கனகை (பொட்டாஸியம் பெர்மாங்கனேட்) போட்டுக் களறச் சொல்லி, அதனைக் கிணற்றுத் தண்ணீரில் ஊற்றவும், பல தடவை அந்த வாளியைக் கொண்டே கிணற்றுத் தண்ணீரைக் கலக்கி விடவும் சொல்ல வேண்டும். பெரிய கிணருனல் மூன்றவுணம் மங்கனகைக்குப் பதிலாகப் பாசிகத்தை (க்ளோரைன்)யும் அவ்வாறே உபயோகிக்கலா மென்றும் சொல்லி வைக்கலாம். இவ்விதமாகச் சுத்தப்படுத்தாத கிணற்றுத் தண்ணீரை அவசியம் கொதிக்கவைத்தே குளிர்ந்த பிறகு குடிக்க வேண்டுமென்று சொல்லி வைக்க வேண்டும்.

கண்வலியோடு பிள்ளைகள் பள்ளிக்கூடத்திற்கு வந்தாலும் பொரிகக் காடி (போரிக் ஆஸிட்) பொடியைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தண்ணீரில் போட்டு நன்ருகப் பல விஞடிகள் கலக்கி அதில் சில சொட்டுகளைக் கண்ணுக்குள் விட்டுக் கண்களைச் சுத்தம் செய்ய வேண்டும். இப்படியாக, காயங்களுக்கும் புண்களுக்கும் பிள்ளைகளுக் கெதிரிலேயே மருந்துகளைச் சேர்த்துப் போட்டு வந்தால், இவைவெறும் படிப்பைக் காட்டிலும் நல்ல படிப்பினையாகும்.

பிள்ளைகளுக்கு நல்ல உரம் சேர்க்கும் விதத்தையும் சொல்லி வைக்க வேண்டும். அப்படி முறையாகச் சேர்ப்பதனுல், எப்படி வீடும்

சுத்தமாக இருந்து வரக் கூடுமென்பதை விளக்கிக் காட்ட வேண்டும். சாணம் கோமயம் முதலியவற்றைப் போடும் கிடங்கு வீட்டை யொட்டி இருக்கக்கூடா தென்றும் கொஞ்சத் தூரமாவது தள்ளியிருக்க வேண்டு மென்றும் சொல்லவேண்டும். ஒரு ஏர் மாடும், ஒரு ஜோடிப் பசுவும் வீட்டிலிருந்தால் 8 அடி நீளம் 6 அடி அகலம் 3 அடி ஆழம் உள்ள கிடங்குவேண்டு மென்பதையும் போதிக்க வேண்டும். வீட்டுச் சாம்பல், குப்பை, கிழிந்த காகிதங்கள், கந்தைத் துணிகள் போடும் கிடங்கு வீட்டை யொட்டியும் இருக்கலாம். அது 3 அடி சதுரமும் 2 அடி ஆழ முமா யிருந்தாலும் போதும். நல்ல உரம் ஒரு வண்டிப் பாரம் நிலத் துக்குச் சேர்ப்பதால், அந்த நிலத்திலிருந்து 6 ரூபா அதிக வரவு கிடைக்கு மென்பதையும் சொல்லிவைத்தால், உரத்தின் முக்கியத்தை யும் அவர்கள் அறிவார்கள்.

இப்படியாக, சுகாதாரம் சம்பந்தப்பட்டதெல்லாம் அனுபவப் படிப்பினையாகவே யிருக்க வேண்டிய தவசியமாகும்.

—"நல்வழி"


மாணவர்களே! வாலிபர்களே!!

உங்களுக்கென சமைத்து வைத்துள்ள

**சுவாமி விவேகாநந்தர்**

**ஞான அமிழ்தத்தை உண்ணுங்கள்.**

★

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீ விவேகாநந்த | சரித்திரம் | விலை | 0—12—0 |
| ,, ,, | கடிதங்கள் | ,, | 0—10—0 |
| ,, ,, | நமது தாய் நாடு | ,, | 0— 8—0 |
| ,, ,, | சுவாமிகள் | ,, | 0— 3—0 |
| ,, ,, | எனது குருநாதர் | ,, | 0— 3—0 |

★

விரிவான ஜாபிதாவுக்கு எழுதுக

**ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்,** மயிலாப்பூர், சென்னை.

# ‘கதை சொல்லுதல்’—ஒரு போதனுமுறை

S. ராமஸ்வாமி அய்யங்கார், தலைமை ஆசிரியர்,
போர்டு ஹையர் எலிமெண்டரி பாடசாலை—பென்னுகரம்

கதை கேட்பதில் குழந்தைகள் மிகுந்த ஆர்வமுள்ளவர்கள். பாட்டிமாரைக் கதை சொல்லும்படி குழந்தைகள் தொந்திரவு செய்வதை நாம் சகஜமாக வீடுகளில் காணலாம். பாவனை இரஸத்துடன் கதை கேட்பதில் குழந்தைகள் இணையற்றவர்கள். கதை கேட்கும்பொழுது சமயத்திற்கேற்ற அனுதாப உணர்ச்சி குழந்தைகளிடையே பீறிட்டு வருவது கண்கூடு. மேலும் மேலும் கதையைத் தொடர்ந்து சொல்லும்படி அவர்கள் கேட்பதால் நூதன விஷயங்களை அறிவதில் அவர்களுக்கு உள்ள தணியாத ஆசை நமக்கு நன்கு புலனுகிறது. எனவே இத்தகைய சுபாவ உணர்ச்சிகளைத் தட்டி எழுப்பும் கதைகளின் மூலம் பாஷா அபிவிருத்தி, சரித்திர விஷயம், பூகோள பாடங்கள், சுகாதாரம் நீதிபோதனை முதலியவற்றை போதிப்பது சாலச் சிறந்ததும் நற்பயனை அளிப்பதும் ஆகும்.

இவ்வாறு செய்வதால் பிள்ளைகளுக்கு சுபாவத்திலுள்ள கதை கேட்கும் விருப்பத்தைத் திருப்தி செய்வதோடு பிழையின்றி மனதிலறிந்த விஷயங்களை வெளிப்படுத்தும் சொற்றிறமையும், வாக்கிய அமைப்பும் உண்டாக்க அடிகோலுவதுமாகும்.

பிள்ளைகளுக்குச் சொல்லும் கதைகள் நாள்தோறும் அவர்கள் அனுபவத்திற்குத் தெரிந்தவைகளாகவும், சிறியனவாகவும் அமைதல் வேண்டும். குழந்தைகளின் பற்றுதல்களுக்கு ஏற்ப சிறுகதைகள் கட்ட ஆசிரியர்கள் வல்லவர்களா யிருப்பின் பெரும் பயன் உண்டாம். கதை சொல்லும் நடை குழந்தைகளின் சாமர்த்தியத்திற்கு ஏற்றவாறு அமைதல் வேண்டும். சிறிது மேம்பட்டதா யிருந்தாலும் நலமே; ஆனல் அவர்கள் எளிதில் அறியத்தக்கதா யிருக்கவேண்டும். முதல் வகுப்பு முதல் மூன்றும் வகுப்பு வரையிலுள்ள மாணவர்கள் கதைகளில் வரும் விஷயங்களை உண்மை யென்றே மதிக்கும் குணம் படைத்தவர்கள். பிரத்தியக்ஷமாகப் பார்க்கும் மனிதர்களைப் போலவே, அவர்களது மனோ இராஜ்யத்தில் வதியும் மனிதர்களும் உண்மையாகவே காணப்படுவர். எனவே குழந்தைகளின் பிற்கால வாழ்வைப் பாதிக்கும்படியான விஷயங்கள் கொண்டதாகக் கதைகள் இருத்தல் நலமன்று. இயற்கைக்கு முரணின்றி கதைகள் இருத்தலும் அவசியமாகும்.

தொன்றுதொட்டுக் கையாண்டுவரும் 'காக்கையும் குடமும்' 'நரியும் கொக்கும்' என்ற கதைகள் நவீன உலகத்திற்குப் பொருந்தாதவைகளாகவும், ஆசிரியர்களின் முயற்சியையும் உற்சாகத்தையும் பாதிக்கக் கூடியவைகளாகவும் இருப்பதால் 'பழையனகழிதலும் புதியனபுகுதலும் காலவகையினனே' என்ற கொள்கைக் கிணங்க பழையன விலக்கி நூதனமான கதைகளைப் பொறுக்கி, அவ்வப் பாடங்களுக்கு ஏற்ப அமைத்தல் பெரிதும் விரும்பத்தக்கதாம். கால வேறுபாட்டிற்குத் தக்கவாறு மனிதர்களின் தேவைகளும், அவசியங்களும், கற்பனைசக்தியும், உருசியும் மாறுபடுகின்றன. எனவே அவற்றிற்குத் தக்கவாறு கதைகளையும், முறைகளையும் திருத்தி யமைத்தல் எத்துணை சிறந்ததாம்!

கதைகள் விளையாட்டுடன் இணைக்கப்படுவதற்குத் தக்கவாறும் இருத்தல் வேண்டும். கதைகள் நடிப்பதற்கும் விளையாடுவதற்கும் ஏற்றவாறு அமைந்தால் பிள்ளைகள் ஆனந்தமும் உற்சாகமும் அடைவதுடன் அவர்களின் சரீரமும் வளர்ச்சியடைய ஏதுவாகும். கதைகளைப் பாட்டுடன் இணைத்தலும் மிகப் பொருத்தமான செயலாகும். இவ்வாறு செய்வதால் குழந்தைகளுக்கு இயற்கையாக உள்ள சங்கீத ஆசையைப் பூர்த்தி செய்வதுடன் அவர்களது தொண்டைகளிலுள்ள இளஞ் சங்கீத நரம்புகளைப் பலப்படுத்தவும் போதிய வசதி யளிக்கலாம். இத்துணை சிறந்த அம்சங்கள் கொண்ட கதைகள் பெரும்பாலும், ஆரம்பப் பாடசாலைகளின் கால அட்டவணைகளில் காணப்பட்டபோதிலும், புறக்கணிக்கப் படுகின்றன; 1939ம் வருடம் கவர்மெண்டாரால் வெளியிடப்பட்ட பாடதிட்டத்திலும் 'கதை சொல்லல்' இடம் பெறவில்லை என்ற காரணம் போலும்! பாடதிட்டத்தில் தனியிடம் பெருவிடினும், 'தஞ்சாவூர்ச் சிறுவன்', 'பாலைவனச் சிறுவன்' என்று பூகோளத்திலும்,. அக்பர், அசோகர் என்று சரித்திரத்திலும் வருவதால் இப்பாடங்களைக் கதைகள் மூலமாகக் கற்பித்தல் அவசியம் என்று கூறுவது போன்று இருப்பதாகக் கொள்ளுதல் தவருகா.

எனவே ஆசிரியர்கள்—சிறப்பாகக் கீழ்வகுப்பு ஆசிரியர்கள் முன்னதாகவே கதைகள் மூலம் போதிக்கக்கூடிய பாடதிட்டத்தைத் தயார் செய்துகொண்டு, தகுந்த படங்கள் முதலிய உபகரணங்கள் மூலம் போதித்துவரின் நற்பயனை அடையலாம்.

இதர போதனுமுறைகளுடன் கதை சொல்லுதலையும் கைக்கொள்ளுதல் பெரும்பயனை அளிக்க வல்லதாம்.

# சங்கீதம்

**K. R. Ramalingam,** *Music Teacher, Sri Ramakrishna Vidyasala, Sivaganga.*

இவ்வுலகில் மிகுந்த உற்சாகத்தை அளிக்கவல்லதும் சோர்வைப் போக்கவல்லதுமான சங்கீதம் யாவராலும் அனுபவிக்கப்படுகிறது. இஃது துரைத்தனத்தாரால் ஆரம்பப் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டிருக்கும் பாடத் திட்டத்தில் ஒரு கட்டாயப் பாடமாகும்.

இஃதை கற்பிக்கும் காலத்தில் நாம் அடியில்காணும் விஷயங்களை முதலில் அறிந்துகொள்ளல் வேண்டும்.

1. பாடல்களைத் தேர்ந்தெடுக்கும்பொழுது அவைகளில் வரும் பதங்கள் கடினமில்லாததாயும், பிள்ளைகள் அதன் பொருள்களை எளிதில் உணரவல்லதுமாகவு மிருக்கவேண்டும்.

2. குழந்தைகளின் சாரீரங்களுக்குத் தகுந்தபடி பொதுவாக நாம் ஒரு ஸ்ருதியை நிர்ணயித்துக்கொள்ளவேண்டும். (ஒரு கட்டை அல்லது ஒண்ணரைக் கட்டை ஸ்ருதி வைத்துக்கொள்ளலாம்).

3. பாட்டுக்களைக் கற்பிக்கும் காலங்களில் பதங்களைத் தகுந்தபடி பிரித்து பாடிக் காட்டவேண்டும். பிறகு வகுப்புப்பிள்ளைகள் எல்லோரையுமே சேர்த்து பாடச் செய்யவேண்டும்.

4. ஸ்ருதி பிசகாமல் பாடும்படி செய்யவேண்டும்.

5. பிள்ளைகளுக்கு பாட்டுக்களின் பொருள்களைத் தெரிந்து கொள்ளும்படி செய்யவேண்டும்.

[பாட்டுக்கள் தாய் பாஷையில் உள்ளவைகளா யிருந்தால்தான் பொருள்களைத் தெரிந்து அனுபவித்துப் பாடக்கூடும்].

நான்கு, ஐந்து வகுப்புகட்குப் பாடத் திட்டத்தில் கண்டபடி சங்கீத சாஸ்திரத்தில் சில குறிப்புகள் :—

1. ஸ்வரம் என்பது தன் குணத்தால் கேட்போர் மனதை ரஞ்சிக்கச் செய்யக்கூடிய த்வனி. சங்கீதத்திற்கு ஆதாரமாயுள்ள ஸ்வரங்கள் ஏழு. அவையாவன :—

1. ஸ (ஷட்ஜமம்) 2. ரி (ரிஷபம்)
3. க (காந்தாரம்) 4. ம (மத்யமம்)
5. ப (பஞ்சமம்) 6. த (தைவதம்) 7. நி (நிஷாதம்)

2. இராகம் என்பது ஸ்வரங்களின் சேர்க்கைகளால் இனிமையை உண்டுபண்ணுவது.


3. ஸ்ருதி:—பாடும்பொழுதோ அல்லது வாத்யங்களில் வாசிக்கும்பொழுதோ வைத்துக்கொள்ளும் ஆதாரமான ஓர் ஸ்வரத்தின் த்வனிக்கு "ஸ்ருதி" என்று பெயர்.

4. (a) ஆரோஹணம் :—ஸ—ரி—க—ம—ப—த—நி—ஸ்— என்ற ஸ்வரங்களை முறையே ஒன்றைவிட ஒன்றை சப்தத்தில் உயர்த்திச் சொல்லிக்கொண்டு போவதற்கு "ஆரோஹணம்" என்றும்,

(b) அவரோஹணம் :—மேற்சொன்னபடி உயர்த்திச் சொல்லிக்கொண்டுபோன ஸ்வரங்களை ஸ்—நி—த—ப—ம—க—ரி—ஸ

என்ற முறையில் ஸ்வரங்களை ஒன்றைவிட ஒன்றை சப்தத்தில் இறக்கிச் சொல்லுவதற்கு அவரோஹணம் என்றும் பெயர்.


இவைகளை அடியில் காணும் படத்தில் எளிதில் அறியலாம் :—




5. ஸ்தாயி :—ஷட்ஜமம்முதல் நிஷாதம் வரையுள்ள ஒரு பாகத்திற்கு "ஸ்தாயி" என்று பெயர்.

முக்கியமாக, ஸ்தாயி மூன்றுவகைப்படும். அவையாவன :—
1. மந்தரஸ்தாயி (கீழ்ஸ்தாயி) 2. மத்யஸ்தாயி 3. தாரஸ்தாயி (மேல்ஸ்தாயி)

ஸ்தாயிகளைத் தெரிந்து பாடும் விதத்தை அடியில் காணும் படத்தால் எளிதில் அறியலாம்.



ஸ்தாயிகளைக் குறிக்கும் விதம் :—

| மந்தரஸ்தாயி | மத்யஸ்தாயி | தாரஸ்தாயி |
|---|---|---|
| ஸ ரி க ம ப த நி (கீழ் புள்ளிகளுடன்) | ஸ ரி க ம ப த நி | ஸ் ரி் க் ம் ப் த் நி் (மேல் புள்ளிகளுடன்) |

ஸ்வரங்களின் கீழ் புள்ளி வைக்கப்பட்டிருந்தால் "மந்தர ஸ்தாயி" என்றும், புள்ளிகளே வைக்கப்படாமலிருந்தால்—"மத்ய ஸ்தாயி" என்றும், ஸ்வரங்களின் மேலே புள்ளி வைக்கப்பட்டிருந்தால் "தார ஸ்தாயி" என்றும் தெரிந்து பாடவேண்டும்.

6. தாளம் :—பாட்டுக்களுக்குக் கொடுக்கும் தகுந்த கால அளவுகளுக்கு "தாளம்" என்று பெயர்.

கைகளால் தட்டுதல், வீசுதல், தட்டி விரல்களால் எண்ணுதல் முதலிய செய்கைகள் தாளங்களுக்கு உண்டு.

7. அக்ஷரங்கள் :—தாளத்தில் தட்டுதல், வீசுதல், தட்டி விரல் எண்ணுதல் முதலிய ஒவ்வோர் செய்கைக்கும் ஒவ்வோர் அக்ஷரம். (ஒவ்வொரு தாளங்களின் செய்கைகளுக்குத் தகுந்தபடி மொத்தம் இவ்வளவு அக்ஷரங்கள் என்பதுண்டு.)

8. ஆதிதாளம் :—இத்தாளத்திற்கு மொத்தம் 8 (எட்டு) அக்ஷரங்கள். இத்தாளத்தைப் போடும்விதம்:—

ஒருதட்டு (முதல் அக்ஷரம்) தட்டி பிறகு சுண்டுவிரல் (2-வது அக்ஷரம்) மோதிரவிரல் (மூன்றுவது அக்ஷரம்) நடுவிரல் (4-வது அக்ஷரம்) களால் எண்ணிய பிறகு ஒரு தட்டு (5-வது அக்ஷரம்) ஒரு வீச்சு (6-வது அக்ஷரம்) பிறகு ஒரு தட்டு (7-வது அக்ஷரம்) ஒரு வீச்சு (8-வது அக்ஷரம்).

9. ரூபக தாளம் :—இத்தாளத்திற்கு மொத்தம் 3 (மூன்று) அக்ஷரங்கள். இத்தாளத்தின் செய்கைகள் இரண்டுவிதம் உண்டு.

(a) ஒரு தட்டு (முதல் அக்ஷரம்) தட்டி பிறகு சுண்டுவிரல் (2-வது அக்ஷரம்) மோதிரவிரல் (3-வது அக்ஷரம்) களால் எண்ணவேண்டும்.

(b) ஒரு தட்டு (முதல், அக்ஷரம்), பிறகு ஒரு தட்டு (2-வது அக்ஷரம்) பிறகு ஒரு வீச்சு (மூன்றுவது அக்ஷரம்).

குறிப்பு :—தாளத்தை இழுக்கவோ, ஓட்டவோ செய்யாமல் ஒரே நிதானமாகப் போடவேண்டும்.

# 33-வது சென்னை மாகாணக் கல்வி மகாநாடு
# 1943

6—3—1943ல் ராவ்சாகிப் ஸ்ரீ வி. பி. ஆதிசேஷய்யாவின் தலைமையில் கூடிய காரியக்கமிட்டி 33-வது சென்னை மாகாணக்கல்வி மகாநாட்டை 1943 மேமீ 10, 11 தேதிகளில் நடத்தத் தீர்மானித்திருக்கிறது. கமிட்டி ஆமோதித்த தத்காலிகமாக உத்தேசித்த நிகழ்ச்சிக் குறிப்பை மெம்பர்களுக்குத் தெரிவிக்கும் பொருட்டு, தென்னிந்திய ஆசிரியனிலும், பாலர்கல்வியிலும் கீழ்க்கண்டபடி வெளியிட்டிருக்கிறோம்.

ஒவ்வொரு மெம்பர் ஆசிரிய சங்கத்திற்கும் தனித்தனியாகத் தெரிவிப்பது சாத்தியமில்லாததால் இந்த அறிக்கையைக் கொண்டே எல்லோரும் தெரிந்து கொள்ளவும்.

டெலிகேட்களுக்குப் பிரத்தியேகமாக அழைப்புக்கடிதம் காலக்கிரமத்தில் அனுப்பப்படும்.

நிகழ்ச்சிக் குறிப்புகள் :

9—5—'43 (ஞாயிறு) மாலை 4 மணி தென்னிந்திய ஆசிரிய சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டம்.

10—5—'43 (திங்கள்)

காலை 10 மணி மகாநாட்டுத் திறப்புவிழா.
மாலை 2 மணி பூகோள மகாநாட்டுத் திறப்புவிழா.
,, 4 மணி யுத்த முடிவிற்குப் பின் கல்வி விஷயங்கள்.
1. பிரைமரி. 2. செகண்டரி. 3. யூனிவர்சிடி.
,, 6 மணி உபந்நியாசம்.
,, 7 மணி விஷயாலோசனைக் கமிட்டி மீடிங்.
,, 10 மணி விருந்து உபசரிப்பு.

11—5—'43 (செவ்வாய்)

காலை 9 மணி தென்னிந்திய ஆசிரியசங்க மகாசபைக் கூட்டம்.
,, 10 மணி தீர்மானங்கள் — யுத்தத்திற்குப்பின் கல்விப் பிரசாரம்.
மாலை 2 மணி தென்னிந்திய ஆசிரியசங்கக் காப்புநிதி மீட்டிங்.
,, 3 மணி பூகோள மகாநாடு முடிவு.
,, 4-30 மணி தீர்மானங்கள் : கல்வி மகாநாடு முடிவு.
,, 9 மணி விருந்து, உபசரிப்பு.

12—5—'43 காலையில் தக்கபடி மெம்பர்கள் சேர்ந்தால் பக்கத்திலுள்ள இடங்களுக்கு உல்லாசப் பிரயாணம்.

டெலிகேட்டுகளைத் தேர்ந்து அனுப்ப முடிவுதேதி—1943 ஏப்ரல் 15. ஒவ்வொரு டெலிகேட்டுக்கும் கட்டணம் அணா எட்டு—பெயர் விலாசத்துடன் தென்னிந்திய ஆசிரியர் சங்கம், திருவல்லிக்கேணிக்கு அனுப்ப வேண்டும்.

# செய்தித் திரட்டு

---

## வெங்கட்டரமண ஆரம்ப பாடசாலை, அபிராமபுரம்

9—2—43ல் இப்பாடசாலையில் இளைஞர் செஞ்சிலுவைச் சங்க ஆரம்பவிழா காரியதரிசி ஸ்ரீ ராமஸ்வாமி அய்யங்கார் தலைமையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. டெப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீமான் அருளானந்தம் இச்சங்கத்தைத் திறந்துவைத்து சங்கத்தின் பூர்வ சரித்திரத்தையும், இதன் நோக்கங்களையும் பற்றி மிகத் தெளிவாகக் கூறினார். குழந்தைகள் அபிநயத்தாலும் சங்கீதத்தாலும் வந்திருந்தவர்களை மகிழ்வித்தனர்.

---

## ஸ்ரீ சாரதா பாடசாலை, மாம்பலம்

i. பாஷா அபிவிருத்தினி சங்கம்:—20—2—43-ல் ரிடயர்டு போலீஸ் டிப்டி சூபரிண்டெண்டு ஸ்ரீவீரராகவய்யர் தலைமையில் கூடி, சிறுவர்கள் ஓர் கதம்பக் கச்சேரி நடத்தினர். 'பொறுமை' என்னும் விஷயம் பற்றிப் பேசப்பட்டது.

ii. பஜனை சங்கம்:—4—3—43-ல் மகா சிவராத்திரியை முன்னிட்டு விசேஷ பூஜை, பஜனை, குழந்தைகளுக்குப் பிரஸாதம் நடைபெற்றன. இரவு, ஸ்ரீரங்கம் ஸ்ரீ சடகோபாச்சாரியார், 'பார்வதி பரிணயம்' என்னும் கதா காலக்ஷேபம் நடத்தினர்.

iii. நாடகக் கழகம்:—மாணவர்களால் 'பக்த துருவா' என்ற நாடகமும், மாணவிகளால் நடனமும், நடைபெற்றன. ஸ்ரீ சுப்பராய அய்யர் தலைமை வகித்தார். ஏராளமாக பெற்றோர்கள் வந்திருந்தனர். தலைவர் நடிகர்களைப் பாராட்டி ரூ. 150 நன்கொடை யளித்தார். பள்ளிக்கூடக்கட்டிட சொந்தக்காரர் ஒரு வெள்ளிக் கோப்பைபரிசளித்தார்.

---

## போர்டு பாடசாலை, பேராம்பட்டு

4—2—43ல் இப்பாடசாலை பெற்றோர்சங்கம் ஸ்ரீ சிவலிங்கம் செட்டியார் தலைமையில் கூடிற்று. ஏராளமான பெற்றோர்கள் வந்திருந்தனர். தலைமை ஆசிரியர் ஸ்ரீ லக்ஷ்மணன் பாடசாலையின் நிலைமையைப் பற்றிக் கூறிப் பிள்ளைகளை ஒழுங்காகப் பள்ளிக்கூடம் அனுப்பும்படி வேண்டிக்கொண்டார்.

---

## ஆரம்ப ஆசிரியர் சங்கம், செய்யாறு

13—2—43ல் இச்சங்கத்தின் வருஷாந்திரவிழா ஜில்லா கல்வியதிகாரி ஸ்ரீ சச்சிதானந்தம் பிள்ளை அவர்களின் தலைமையில் கொண்டா

ட்ப்பட்டது. மாணவமாணவிகள் 'ஞானசம்பந்தர்' என்னும் நாடகம் நடித்தினர். திரு ஆரிமுத்து முதலியார் 'ஆரம்ப பாடசாலையில் தாய் மொழி போதனை' என்பது பற்றி சொற்பொழிவு செய்தார்.

---

## விழுப்புரம் தாலூகா ஆரம்ப ஆசிரியர்கள் யூனியன், வழுதாவூர்

28-2-43ல் நடந்த மீட்டிங்கில், ஜில்லாபோர்டார் தற்சமயம் ஆரம்ப ஆசிரியர்களுக்கு யுத்தப்படி கொடுக்கப்போதுமான சௌகர்ய மில்லை என்றதின்மேல் டைரக்டர் துரையையும், அட்வைசர் துரையவர்களையும், S.I.T.U தலைவர் மூலம் நேரில் விஷயங்களைத் தெரிவிப்பதாகத் தீர்மானிக்கப்பட்டது.

---

## நேடிவ் எலிமெண்டரி பாடசாலை, நெல்லிக்குப்பம்

28—2—43ல் இப்பாடசாலை பெற்றோர் தினக்கொண்டாட்டம் நடைபெற்றது. அனேக பெற்றோர்களும் ஆசிரியர்களும் மாணவ மாணவிகளும் வந்திருந்தனர்.

உபாத்தியாயர் ஸ்ரீ கோவிந்தசாமி அவர்கள் 'கல்வியும் பெற்றோர் கடமையும்' என்பது பற்றிப் பேசினார். மாணவர்கள் 'நந்தனார்' என்ற நாடகத்தை நடத்திக் காட்டினர்.

---

## போர்டு உயர்தர ஆரம்பபாடசாலை, பெண்ணாடம்

30—1—43ல் இப்பாடசாலை மாணவர் சங்கம் கூடி, விருத்தாசலம் போர்டு ஹைஸ்கூல் பிரதம தமிழாசிரியரும் இச்சங்கத்திற்கு பேருதவி புரிந்தவருமான திரு. சிவகுருநாதம் பிள்ளையின் திடீரென ஏற்பட்ட மரணத்திற்கு அனுதாபம் தெரிவித்து பிரேத ஊர்வலத்திலும் கலந்துகொண்டனர்.

---

## ஆரம்ப ஆசிரியர் சங்கம், ஆலந்தூர்

6—2—43ல் இச்சங்கம் கூடிற்று. மாம்பலம் ஸ்ரீ ராமகிருஷ்ண உயர்தர பாடசாலை உதவி ஆசிரியர் ஸ்ரீ ராகவாச்சாரியார் 'தற்கால யுத்தநிலைமை' என்பது பற்றி சொற்பொழிவு செய்தார்.

---

## இந்து மத பாடசாலை, வாலாஜாபாத்

8—2—43ல் வாலாஜாபாத் விழாக்கள் திரு. சபாபதிவள்ளலார் தலைமையில் கொண்டாடப்பட்டது. காலையில், திருப்பத்தூர் சண்முக முதலியார் இயற்றிய 'திருமால்போற்றி அகவல்' என்ற நூலை வித்துவான் வேணுகோபாலபிள்ளை அரங்கேற்றினார். பிறகு அரசடிப் பிள்ளையார் திருவமைப்பும் திருமுழுக்கும் நடைபெற்றன. பிற்பகலில் 'ராமன்

விருந்தினர் மாளிகை' வழக்குரைஞர் விசுவநாத சாஸ்திரிகளால் திறந்து வைக்கப்பட்டது. தலைவர் இப்பாடசாலையின் ஒப்புயர்வற்ற நிலையைப் புகழ்ந்து பேசினர்.

---

## அவனாசி தாலூகா போர்டு ஆரம்ப ஆசிரியர் யூனியன், காரமடை

7—2—43ல் மகாசபைக் கூட்டம் நடைபெற்றது. பஞ்சப்படி, வைத்தியராஜாவுக்கு முழுச்சம்பளம், கோடை விடுமுறையில் சங்கீத வகுப்புகள் அமைத்தல் ,பற்றி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ஒவ்வொரு சென்டரிலும் 'பாலர்கல்வி'ப் பத்திரிகை வரவழைக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. மாலையில் நடந்த ஆண்டு விழாக் கூட்டத்திற்கு ஜில்லாபோர்டு கல்வியதிகாரி ஸ்ரீ கோபாலய்யர் தலைமை வகித்தார். பலர் அரிய சொற்பொழிவுகள் செய்தார்கள்.

---

## ஆரம்ப ஆசிரியர் சங்கம், பள்ளிபாளயம்

27—2—43ல் இச்சங்கம் ஸ்ரீ வெங்கட சுப்பையர் அவர்கள் தலைமையில் கூடிற்று. அப்பொழுது ஸ்ரீ கிருஷ்ணசாமி அய்யா,; ராமசாமி கவுண்டர் முதலியவர்கள் "ஸ்கூல்களினால் பரவக்கூடிய வியாதிகளும், தடுக்கும் முறைகளும்" என்பது பற்றியும், ஸ்ரீ நரசிம்மாசார், அப்புசாமி அய்யர் முதலியவர்கள் "ஐந்தாவது வகுப்புக்கு ராபர்ட் கிளைவ் போதித்தல்" என்பது பற்றியும் சொற்பொழிவு செய்தார்கள். ஸ்ரீ சுந்தரேசன் கைத்தொழிற பயிற்சி சம்பந்தமாய் வலைகள், வலைப்பை முதலியன செய்து காண்பித்து விளக்கினர். ஸ்ரீ அந்தோணி முத்து போதனாமுறை உபகரணங்கள் தயாரித்தல் விஷயமாகப் பேசினர். I to V வகுப்புகளுக்கு இயற்கைப்பாடம் போதிக்கும் முறை ஸ்ரீ V. கிருஷ்ணராவ் அவர்களால் விளக்கப்பட்டது. யுத்த முயற்சியைப் பற்றி ஸ்ரீ R. வெங்கட்ராமய்யர் கூறினர். பின்னர் இராஜ வாழ்த்துடன் கூட்டம் இனிது கலைந்தது."

---

## ஸ்ரீ ராமகிருஷ்ண வித்யாசாலை, சிவகங்கை-

5—2—43 ல் உபாத்தியாயர்களும், மாணவ மாணவிகளும் தெற்கே 5 மைலுக்கு அப்பாலுள்ள "சுந்தர நடப்பு" என்ற கிராமத்துக்கு உல்லாசப் பிரயாணம் செய்தனர். வழியில் வேளாண்மை சம்பந்தமான விஷயங்களை நேரில் கண்டுகளித்தனர். அக்கிராமத்து ஸ்ரீ சுப்ரமணிய அய்யரால் கோஷ்டியாருக்கு நல்விருந்து நடைபெற்றது. மாலையில் ஆடல்பாடல்களால் அவ்வூராரை மகிழ்வித்தனர்.

---

## திருச்செங்கோடு தாலூகா போர்டு ஆரம்ப ஆசிரியர் யூனியன், கொங்கணபுரம்.

31—1—43 ல் மகாசபைக்கூட்டம், டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ ஆராவமுத அய்யங்கார் தலைமையில் நடைபெற்றது.

தீர்மானங்கள் :—1. கனம் டைரக்டர் துரையவர்களுக்கு 'ஸர்' பட்டம் அளிக்கப்பட்டதற்குச் சந்தோஷத்தைத் தெரிவிக்கிறது. 2. பாடசாலை நாட்களைக் குறைக்கவும், 3. ஹிந்து மகம்மதிய ஆசிரியர்களுக்கு ஸெக்ஷன் விடுமுறை யளிக்கவும். 4. கைத்தொழில் செக்ஷன்களை பெர்மனெண்ட் செய்யும்படியும். 5. ஆரம்ப ஆசிரியர் குழந்தைகளுக்கு உயர்தரபள்ளியில் இலவசப்படிப்பு அளிக்கும்படியும். 6. ஒவ்வொரு ஆரம்ப பாடசாலைக்கும், ஒரு தமிழ்பண்டிதர், ஒரு டிரில் ஆசிரியர், ஒரு சங்கீத ஆசிரியர் நியமிக்கும்படியும், 7. ஆரம்ப ஆசிரியர்களுக்கு வேலையில் சேர்ந்த தேதிமுதல் இங்கிரிமெண்டு கொடுத்துதவும்படியும், 8. எல்லா ஹெட்மாஸ்டர்களுக்கும், ஹெட் மிஸ்ட்ரஸ்களுக்கும் டியூடி அலவன்ஸ் கொடுக்கும்படியும், 9. பஞ்சப்படியை அதிகப்படுத்திக் கொடுக்கும்படியும் ஜில்லா போர்டாரைக் கேட்டுக்கொள்ளுகிறது. 10. திரு. எக்ஞ நாராயணய்யர் அவர்கள் ஷஷ்டியப்த பூர்த்திக்கு ரூ. 5 நன்கொடை அளிக்கத் தீர்மானித்தது. பிறகு நிர்வாகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

---

## ஆரம்ப ஆசிரிய சங்கங்களின் வருஷாந்திர விழா.

20—2—43 ல் 1. எடப்பாடி 2. கொங்கணபுரம், 3. மகுடஞ்சாவடி சென்டர்களின் வருஷாந்திரவிழா ஜில்லா கல்வியதிகாரி ஸ்ரீ. V. நடராஜன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தலைவரின் வாழ்க்கைத்துணைவியாரும் விஜயம் செய்திருந்தனர். டிப்டி இன்ஸ்பெக்டர்களும் வந்திருந்தார்கள். தலைவர் ஆசிரியர் கடமைகளைப்பற்றியும், பிள்ளைகளுக்கு சுத்தம், ஒழுக்கம் முதலியன பழக்கும் வழிகளையும், தமிழ் முதலிய பாடங்களை எளிதில் நன்றாய் போதிக்கும் விதத்தையும், தக்க உபகரணங்களைக்கொண்டு எடுத்துக்காட்டினர். எடப்பாடி மாணவர்கள் பாட்டு, கதை, வியாசம், சம்பாஷணை இவைகளால் எல்லாரையும் மகிழ்வித்தனர்.

---

## போர்டு உயர்தர ஆரம்ப பாடசாலை, பெத்தநாயக்கன் பாளையம்.

18—2—43 ல் இப்பாடசாலை ஆண்டுவிழா, ஆத்தூர் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ சங்கரநாராயணய்யர் தலைமையில் கொண்டாடப்பட்டது.

அப்பொழுது, சாரணர்களால் ஓர் நாடகம் நடிக்கப்பட்டது. தலைவர் முதியோர் கல்வியின் அவசியத்தைப்பற்றி உபந்நியாசம் செய்தார்.

---

### போர்டு ஹையர் எலிமெண்டரி பாடசாலைகள், ஆட்டையம்பட்டி.

8—2—43 ல் ஆண் பெண் பாடசாலைகளில், சீனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ சதாசிவம் தலைமையில், சுகாதாரவாரம் கொண்டாடப்பட்டது. ஏராளமாக ஜனங்கள் வந்திருந்தனர். மாணவ மாணவிகளுக்குத் தின்பண்டங்கள் வழங்கப்பட்டன. இவர்கள் கும்மி, கோலாட்டம், விளையாட்டுகளால் எல்லாரையும் மகிழ்வித்தனர். 'சுக உலகம்' என்ற நாடகத்தை நடித்தனர். போட்டிகளில் தேர்ச்சிபெற்றவர்களுக்குப் பரிசு அளிக்கப்பட்டது. தலைவர் சுகாதாரத்தைப்பற்றிச் சொற்பொழிவு செய்தார்.

---

### ஓமலூர் தாலூகா போர்டு ஆரம்ப ஆசிரியர் யூனியன், ஜலகண்டபுரம்.

28—2—43 ல் காரியக்கமிட்டிக் கூட்டம், ஸ்ரீ வெங்கடசுப்பிரமணிய அய்யர் தலைமையில் நடைபெற்றது. தீர்மானங்கள்:—1. ஏற்றத் தாழ்வு இல்லாமல் எல்லா ஆசிரியர்களுக்கும் ஒரேவிதமாக யுத்தப்படி கொடுக்கும்படியும், 2. கண்டிஞ்செண்டு தொகையை 1, 2, உபாத்தியாயர் பாடசாலைகளுக்கு ரூ. 1 வீதம் கொடுக்கும்படியும், 3. சம்பள ஸ்கேல் கொடுத்ததற்கு மனமார்ந்த வந்தனத்தைத் தெரிவிப்பதுடன், நியமிக்கப்படும் ஆசிரியர்களுக்கும், ஸெகண்ட்ரிகிரேடு ஆசிரியர்களுக்கும் G. O. ப்படி ஸ்கேல் கொடுத்துதவும்படியும், ஜில்லா போர்டாரைக் கேட்டுக் கொள்ளுகிறது. 4. ஆரம்ப பாடசாலை ஆசிரியர்களுக்கு கிரோஸினெண்ணை மாதம் 3 பாட்டில் வீதம் சப்ளைசெய்ய கலெக்டருக்கு சிபார்சு செய்யும்படி கல்வி அதிகாரியையும், போர்டாரையும் வேண்டிக் கொள்ளுகிறது. பிறகு தலைவர் ஒற்றுமை என்பது பற்றி சொற்பொழிவு செய்தார்.

---

### உதவி பெறும் ஆரம்ப ஆசிரியர் சங்கம், கொடவாசல்

30—1—43-ல் ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டர் ஸ்ரீ சோமசுந்தரம் பிள்ளை அவர்கள் தலைமையில்கூடியது. தீர்மானங்கள்:—(a) சர்க்கார் சிப்பந்திகளுக்குப் போலவே ஆரம்ப ஆசிரியர்களுக்கும் ரூ. 6 வீதம் யுத்தப்படி கொடுக்கவேண்டுமாயும், (b) மானேஜ்மெண்டு சத வீதம் இந்த யுத்தப்படியை பாதிக்கக் கூடாதென்றும், (c) கிராண்டுத் தொகையை மற்

தப் பள்ளிக்கூடங்களுக்குப் போல் உயர்த்தி அளிக்கவேண்டுமாயும் (d) பள்ளிக்கூட நாட்களை 220-லிருந்து 200-ஆகக் குறைக்கும்படியும் அதிகாரிகளைக் கேட்டுக் கொள்ளுகிறது.

---

## ஆரம்ப ஆசிரியர் சங்கம், அம்மாபேட்டை

20—2—43-ல் ஸ்ரீ சபாபதித் தேவர் தலைமையில் கூடி நிர்வாகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

---

## ஆரம்ப பாடசாலை, ஸ்ரீ வாஞ்சியம்

13—2—43-ல் தேசியப் போர் முன்னணிக் கூட்டம் நடைபெற்றது. மிராசுதார் ஸ்ரீ பாலசுப்ரமணியஞ் செட்டியார் தலைமை வகித்தார் மாணவிகள் கும்மி, கோலாட்டம், யுத்தப் பாடல்கள் பாடினர். உணவுப் பொருள் உற்பத்தி பற்றி விவசாய இலாகா அதிகாரி பேசினார். ஆசிரியர் புருஷோத்தமன் நாம் யுத்த சேவை செய்யும் விதங்களை பற்றிப் பேசினார். யுத்தமும் உணவுப் பொருளும் என்பதுபற்றி தாசில்தாரும் டிவிஷனல் ஆர்கனைசரும் பேசினார்கள்.

---

## திருவள்ளுவர் மிஷன் உயர்தர ஆரம்ப பாடசாலை, வீரவநல்லூர்

22—2—43-ல் ஸ்ரீ திருவள்ளுவர் தினம் கொண்டாடப்பட்டது. காலை படங்களுடனும், திருக்குறள் பாடல்களுடனும் ஊர்வலம் நடந்தது. பூஜைக்குப் பிறகு சுமார் 1000 ஜனங்களுக்கு அன்னமளிக்கப் பட்டது. இரவு மாணவ மாணவிகளால் திருவள்ளுவர் சரித்திரம் என்ற நாடகம் நடிக்கப்பட்டது.

---

## போர்டு ஆரம்ப ஆண் பெண் பாடசாலைகள்
## மேட்டுப்பாளையம் (திருச்சி)

(a) 8—2—43-ல் கரிகாலி மிராசுதார் ஸ்ரீ ராமய்யா அவர்கள் தலைமையில் பெற்றோர் சங்கம் நிறுவப்பட்டது. சுமார் 300 பெற்றோர்களும் 700 பிள்ளைகளும் வந்திருந்தனர். மாணவிகளால் கும்மி கோலாட்டங்களும், பாடசாலை உதவி ஆசிரியர் ஸ்ரீராமச்சந்திரய்யரால் ஓர் இனிய சங்கீதக் கச்சேரியும் நடைபெற்றன. பிறகு தலைவர் இச்சங்கத்தின்

அவசியத்தைப் பற்றியும், பெற்றோர்களின் கடமையைப் பற்றியும், விரிவாக சொற்பொழிவு செய்தார்.

(b) 27—2—43ல் மேட்டுப்பாளையம் போர்டு ஆரம்ப ஆசிரியை சங்க ஆண்டுவிழா, ஆசிரியர் ஸ்ரீ எம். எஸ். பால், முசிறி, தலைமையில் கொண்டாடப்பட்டது. மாணவிகள் கும்மி, கோலாட்டம் போட்டனர். தலைவர் பூகோளத்தின் அவசியம், யுத்தப்பொது நடவடிக்கைகள், உலக அதிசயங்கள், உலகப்பிரிவுகள் முதலியனபற்றி விரிவாகப்பேசினார்.

---

## முனிசிபல் முஸ்லீம் பாடசாலை, ரகுமத்துல்லாபுரம், தூத்துக்குடி

6—3—42ல் மாணவர் சங்க முதல் ஆண்டுவிழா முனிசிபல் கமிஷனர் ஸ்ரீ முருகேசம்பிள்ளை அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது. பல பிரமுகர்கள் வந்திருந்தனர். மாணவ மாணவிகள் கும்மி, கோலாட்டங்களால் எல்லோரையும் மகிழ்வித்தனர். தலைவர் குழந்தைகளுக்குப் பரிசு வழங்கினார். தற்கால கல்வி நிலை என்பதுபற்றி ஜனாப் அப்துல் காதர் சாகிப் பேசினார்.

---

## ஆரம்ப ஆசிரியர்சங்கம், கோவிலூர்

28—2—43ல் வருஷாந்தர மகாசபைக்கூட்டம் ஸ்ரீ சக்ரவர்த்தி அய்யங்கார் தலைமையில் நடைபெற்றது. 'ஆரம்ப ஆசிரியர் கடமை' என்பதுபற்றி ஸ்ரீ வரதாச்சாரியாரும் மற்றும் பலரும் பேசினார்கள். பின்பு, யுத்த அலவன்ஸ் அளித்ததற்கு நன்றி செலுத்துவதுடன், சர்க்கார் சிப்பந்திகளுக்குப்போல் உயர்த்தியளிக்கும்படியும், பையன்கள் பழய புத்தகங்களையே அடுத்த வருஷமும் உபயோகிக்கும்படியும், சாதல்வார் தொகை முதலியனபற்றியும் பலதீர்மானங்கள் நிறைவேறின. பிறகு நிர்வாகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

# பத்திராதிபர் குறிப்புகள்

சரியான பதில் :

சென்னைக் கார்ப்பொரேஷன், சென்ற ஆகஸ்டு மாதத்தில் ஆரம்ப ஆசிரியர்களுக்கு யுத்தப்படி சாங்க்ஷன் செய்தார்கள். மற்ற சிப்பந்திகளுக்கும் யுத்தப்படி சாங்க்ஷன் செய்யப்பட்டது. ஆயினும் ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படும் யுத்தப்படி ஆரம்பக் கல்வி நிதியிலிருந்தே கொடுத்து வரவேண்டுமாம். ஆரம்பக் கல்விநிதியோ, சாதாரணச் சிலவுக்கே போதாமலிருக்கிறது. பொது நிதியிலிருந்து ஒரு லக்ஷ ரூபாய்க்குமேல் செலவிடவேண்டி யிருக்கிறது. ஆகவே, கார்ப்பொரேஷன், ஆசிரியர்கள் யுத்தப்படிச் சிலவுக்காக கவர்ன்மெண்டை ஒருலக்ஷ ரூபாய் உதவி அளிக்கும்படி கேட்டுக்கொண்டது. கார்ப்பொரேஷனும், துரைத்தனத்தாரின் நெருக்கடியான நிலையை அறியாததல்ல. சென்ற வருஷத்தில் துரைத்தனத்தாரின் எச்சரிக்கையின்பேரில் ஏற்பட்ட வெளியேற்றத்தினால், பல வீடுகள் காலியா யிருக்கின்றன. அதனால், கார்ப்பொரேஷனின் வீட்டுவரி வசூல் குறைவுபட்டுள்ளது துரைத்தனத்தாருக்கும் தெரிந்ததுதான். எனவே, 50,000 ரூபாயை மானியமாகவும் 50,000 ரூபாயை கடனாகவும்தான் கார்ப்பொரேஷன் கேட்டது. தங்களுடைய பொறுப்பை சரிவர உணராமல் கவர்ன்மெண்டார் இந்த வேண்டுகோளை நிராகரித்துவிட்டது மிகவும் விசனிக்கத்தக்கது. இதற்குச் சரியான பதில் சென்னைக் கார்ப்பொரேஷன் மேயர் ஸ்ரீமான் தாதுலிங்க முதலியார் கூறியதுதான் என்று நாம் எண்ணுகிறோம். "சர்க்காரின் சார்பாகவே நகரிலுள்ள குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்வியைப் போதிக்கும் பொறுப்பை கார்ப்பொரேஷன் ஏற்றுக்கொண்டிருக்கிறது. இந்தக் கஷ்ட காலங்களில்கூட கவர்ன்மெண்டார் உதவிசெய்ய முன்வராவிடின் கார்ப்பொரேஷன் கல்வி இலாகாவை அவர்களே ஏற்றுக்கொண்டு விடவேண்டுமென்று நான் சொல்லத் தயார்." ஸ்தலஸ்தாபனங்களும், உதவிபெறும் மானேஜ்மெண்டுகளும், ஆரம்பப் பள்ளிக்கூடங்களை நடத்தி வருகின்றன. ஆனால் அது யாருடைய பொறுப்பு? அக்கடமை கவர்ன்மெண்டைச் சேர்ந்ததாகும். கடமையை செலுத்துவதில், இவர்கள் உதவிவருகிறார்கள என்பதை மறக்கக்கூடாது. உதவ முன்வந்தால் முழு பொறுப்பையும் அவர்கள் தலையில் சுமத்திவிட்டு, வாளாயிருப்பது கவர்ன்மெண்டுக்கு ஒழுங்காகாது. ஸ்ரீமான் தாதுலிங்க முதலியார் சொல்வதுபோல, இதுபோன்ற நெருக்கடியான காலத்தில், இவைகளுக்குத் தாராளமாக உதவியளிப்பது கவர்ன்மெண்டின் முதல் பொறுப்பாகும். இந்தியர்களின் வரிச்சுமை அவர்களின் வருமானத்தில்

ஒரு பெரும் பகுதியாய்விட்டது. அப்படி யிருக்க, மேலும் புதிய ஸ்தல வரிகள் விதித்தோ, அல்லது பழைய வரிகளை உயர்த்தியோ வேண்டிய பணத்தை சேகரித்துக் கொள்ளுங்கள் என்று சொல்லும் புத்திமதி கல்வியின் அவசியத்தையும், ஜனங்களின் கஷ்டத்தையும் உணராதவர் கூறுவதாகும். துரைத்தனத்தாரை ஆரம்பக் கல்வி விஷயத்தில் தங்கள் பொறுப்பை நன்கு உணரும்படி செய்யவேண்டும். அது செய்வதற்கு, ஆசிரியர்கள் சம்பளத்தைக் குறைப்பதோ பள்ளிக்கூடங்களை மூடுவதோ சரியான முறையாகாது. சென்னை மேயர் என்ன பதிலைச் சொல்வதற்குத் தயார் என்று சொன்னாரோ அந்தச் சரியான பதிலை எல்லோரும் ஒரே முகமாக உறுதியாகச் சொல்லவேண்டும்.

---

## ஆசிரியர்களின் நான்கு பொறுப்பு

'நான்கு சுதந்திரம்' 'நான்கு பொறுப்பு' என்று எல்லாம் இப்பொழுது நான்காய்விட்டது. பிரெசிடெண்டு ரூஸ்வெல்டு, சண்டையின் லக்ஷியம் நான்கு சுதந்திரத்தை நிலைநாட்டுவது என்றார். நமது டைரக்டர் ஆசிரியர்களின் பொறுப்பு நான்கு என்றார். ஆசிரியர்களின் பொறுப்பு என்ன என்பதை ஆசிரியர்களும் மற்றவர்களும் அறிந்து கொள்வதில் மிக நன்மையுண்டு. சென்ற வாரத்தில், எல்லா ஆசிரியர்களும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள் என்னும் உண்மையை உணர்த்தும் பொருட்டு, சென்னைநகரிலுள்ள எல்லா கிரேடு ட்ரெயினிங் பாடசாலைகளில் பயிற்சிபெறும் ஆசிரியர்கள் கூட்டம் ஒன்று நடந்தது. அதில் நமது டைரக்டர் **Sir. R. M. Statham** துரை அவர்கள் ஆசிரியர்களின் நான்கு பொறுப்பை விவரித்தார். அவை : (1) ஒவ்வொரு மாணவனுக்கும் கல்வி பயில்வதில் யாதொரு தடையும் இல்லாமல் பார்த்துக்கொள்வது (2) கல்வி பரவுதலுக்காக புதிய முயற்சிகள் கிராமங்களில் எடுத்துக்கொள்வது (3) சுகாதாரக் கல்வி, எல்லோருக்கும் அளிப்பது (4) நமது ஊக்கம் சிறிதும் தளர்ச்சி யடையாமலிருப்பது. இவைகளை நாம் எவ்வாறு வகிக்கமுடியும்? இவைகள் எல்லாம் முழுவதும் ஆசிரியர் பொறுப்பாகுமா? இந்த பிரச்னைகளை நாம் தீரயோசிக்க வேண்டியது அவசியம். அவைகளை எவ்வளவு அளவுக்கு நாம் ஏற்றுக்கொள்ள முடியுமோ, அவ்வளவை ஏற்றுக்கொள்வது நமது கடமையாகும். தவிர, இப்பொறுப்புகள் நிறைவேறுவதற்கு வேண்டிய மார்க்கத்தைத் தேடுவது ... யும் சிறந்த தொண்டாகும்.

... உணக்காப்பக

---

S. I. T. U. PROTECTION FUND, LTD., MADRAS

BAZAAR ROAD, VILLUPURAM.

நீங்கள்

இந்த நிதியில்

சேர்ந்து விட்டீர்களா?

| | | | |
|---|---|---|---|
| தற்கால கையிருப்பு | ... | ... | ரூ. 2,47,115 |
| பாலிஸிக்கள் | ... | ... | 1,371 |
| யூனிட்டுகள் | ... | ... | 2,585 |

ஆக்சுவரியின் பரிசோதனையில்,
நல்ல லாபம் காணப்படுகிறது!

ரூபாய்க்கு 2 அணு விதம் போனஸ்

கொடுக்கலாமென்று அபிப்ராயப்படுகிறார்.

உடனே சேருங்கள்!

வி. ஸ்ரீநிவாஸன், காரியதரிசி.

Regd. No M. 3473




# புதிய எண்ணங்களுக்கு

மாணவர்கள், எழுத்தாளர்கள், அறிஞர்கள் டீயை மிக விரும்புவதேன்? டீ மூளைக்கு ஊக்கமளித்து புதிய புதிய எண்ணங்களை வெளியிட உதவுவதால் தான். மற்றெந்த பானத்திற்குமில்லாத ஓர் விசேஷ குணம் டீக்கு உண்டு. அது மூளையை சுருசுருப்பாக்கி கற்பனா சக்தியை விருத்தி செய்யும் குணமே. புதிய எண்ணங்களைப் பெற டீ அருந்துங்கள்.




டீ தயாரிக்கும் முறை: சுத்தமான தண்ணீரைக் கொதிக்க வைத்து ஈரமில்லாத பாத்திரமாக ஒன்று எடுத்து ஒவ்வொருவருக்கும் ஒரு டீ ஸ்பூன் வீதமும், அதிகமாக ஒரு ஸ்பூன் அளவும், நல்ல இந்திய தேயிலையைப் போட்டு கொதிக்கும் ஜலத்தை விட்டு, ஐந்து நிமிஷம் கழித்து வடிக்கட்டி பாலையும் சர்க்கரையையும் சேர்த்துக் கொள்ளுங்கள்.

## இந்தியன் டீ

சர்வ சாதாரணமான பானம்

இந்தியன் டீ மார்கெட் எக்ஸ்பான்ஷன்
போர்டாரால் வெளியிடப்பட்டது

I.K.147.V.


Printed by K. Sadagopachariar at the Liberty Press, 10, Linghi Chetty St., Edited & Published by Mr. M. S. Sabhesan, M.A., for "The South India Teachers' Union." 520, High Road, Triplicane, Madras.